சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் – கல்வி – விடுதிகள் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளுக்கு மின்னணு எடை இயந்திரம் வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந4) துறை
நந்தன, தை 5 திருவள்ளுவர் ஆண்டு 2044

அரசாணை (நிலை) எண். 5

நாள்.18.1.2013

படிக்கப்பட்டது

ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடித எண்.ந.க.எண்.த1/02/2012
நாள்.9.5.2012 26.6.2012, மற்றும் 4.7.2012.

---

ஆணை:–

2012–2013–ம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மானியக்கோரிக்கையின் போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் அனைத்து விடுதிகளுக்கும் மின்னணு எடை இயந்திரம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

2. மேற்கண்ட அறிவிப்பு தொடர்பாக ஆதிதிராவிடர் நல ஆணையர் தமது கருத்துருவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 1277 ஆதிதிராவிடர் நல விடுதிகளும், 40 பழங்குடியினர் நல விடுதிகளும், 299 பழங்குடியினர் நல உண்டி உறைவிடப்பள்ளிகளும் இயங்கி வருகின்றன எனவும் இவ் விடுதிகள்/பள்ளிகளில் பணிபுரியும் விடுதிக்காப்பாளர் / காப்பாளினிகள் மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கைக்கு தகுந்தாற்போல் உணவுப் பொருட்களை மற்றும் மளிகைப் பொருட்கள் சரியான முறையில் அளந்து கொடுப்பதற்கும், இருப்புப் பொருட்களை சரியான முறையில் வைத்திருக்கவும், எடை இயந்திரம் மிகவும் அவசியமாக தேவைப்படுகிறது என்றும் இது தொடர்பாக ஆதிதிராவிடர் நல ஆணையரகத்தில் விடுதி காப்பாளர்களை மாவட்டவாரியாக நேரில் வரவழைத்து ஆய்வு மேற்கொண்டதிலும் விடுதிக்கு வழங்கப்படும் உணவு பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் சரியான விகிதத்தில் அளப்பதற்கும் இருப்புப் பொருட்களை சரியான அளவில் வைத்திருக்கவும் விடுதிகளுக்கு எடை இயந்திரம் மிகவும் அவசியமாக தேவைப்படுகிறது என கருத்து தெரிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

3. மேலும் இத்துறையின் கீழ் இயங்கும் கல்லூரி விடுதிகளுக்கு மட்டும் ஏற்கெனவே ரூ.2000/–ம் மதிப்பீட்டில் எடை இயந்திரம் (தராசு) வழங்கப்பட்டு அவை அனைத்தும் தற்பொழுது பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதாக தெரிவித்து அனைத்து விடுதிகளுக்கும் தரம் வாய்ந்த மின்னணு எடை இயந்திரம் (50 கிலோ திண்மப் பொருள் அளக்கக்கூடியது) வழங்க

வேண்டியது அவசியம் என தெரிவித்து இத்துறையின் கீழ் இயங்கும் 1616 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிட பள்ளிகளுக்கு, பள்ளி/விடுதி ஒன்றிற்கு ஒரு எடை இயந்திரம் வீதம் 1616 எடை இயந்திரங்கள் ஒரு எடை இயந்திரம் ரூ.5000/- விலையில் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த வகையில் 1616 எடை இயந்திரம் வாங்க ரூ.80,80,000/-ம் (ரூபாய் எண்பது இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) (ரூ.5000x1616=80,80,000) செலவினம் ஏற்படும் என்றும், இத்தொகையினை 2012-13-ம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யுமாறும் ஆணையர், ஆதிதிராவிடர் நலம் அவர்கள் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அவற்றை ஏற்று இத்துறையின் கீழ் இயங்கும் 1616 விடுதிகள் மற்றும் உண்டி உறைவிடப்பள்ளிகளுக்கு தலா ஒரு மின்னணு எடை இயந்திரம் (50 கிலோ திண்மப்பொருளை அளக்கக் கூடியது) ரூ.5000/- வீதம் மொத்தம் ரூ.80,80,000/- வாங்கி வழங்கவும், இச்செலவினத்திற்கு அரசாணை (நிலை) எண்.22, ஆதி (ம) பந துறை, நாள்.19.03.2012-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள ரூ.8000/- போக மீதத்தொகை ரூ.80,72,000/- (ரூபாய் எண்பது இலட்சத்து எழுபத்தி இரண்டாயிரம் மட்டும்) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

| | |
|---|---|
| (i) | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கடித எண்.8119/ஆதிந8/2012-2 நாள் 19.6.2012-ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி திறந்த ஒப்பந்தப்புள்ளி முறையில் (Central Open tender system) மின்னணு எடை இயந்திரம் வாங்கப்படவேண்டும். |
| (ii) | இத்திட்டத்திற்கென ஒப்பளிக்கப்பட்ட தொகையில் செலவினம் போக மீதம் இருப்பின் அத்தொகையினை அரசு கணக்கில் ஒப்படைப்பு செய்தல் வேண்டும். |

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்

| கணக்குத்தலைப்பு | விடுதிகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| "2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி – I திட்டத்தில் சேராதது – AE மாணவர் இல்லங்கள்" – 19 – இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல்<br>(த.தொ.எண்.2225 01 277 AE 1911) | 1016x5000 | 50,80,000/- |
| "2225– ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத்திட்டம் – KD மாணவரில்லங்கள்" 19 இயந்திரமும் சாதனமும் – 01 – வாங்குதல்<br>(த.தொ.எண்.2225 01 277 KD 1913) | (251 x 5000)<br>+<br>(4 x 3000) | 12,67,000/- |

| | | |
|---|---|---|
| "2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத்திட்டம் – KE ஆதிதிராவிடர் நல பட்ட மேற்படிப்பு மாணவர் இல்லத்தைத் தொடங்குதல் – 19 – இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல் (த.தொ.எண்.2225 01 277 KE 1911) | 15x5000 | 75,000 |
| "2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 – ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி – I திட்டத்தில் சேராதது – AA பள்ளிக்கல்வி – 19 இயந்திரமும் சாதனமும், 01 வாங்குதல் (த.தொ.எண்.2225 01 277 AA 1919) | 1x5000 | 5,000 |
| "2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 02 – பழங்குடியினர் நலன் – 277 – கல்வி – I – திட்டத்தில் சேராதது – AF – பழங்குடியினர் மாணவர் இல்லங்களைப் பராமரித்தல் – 19 இயந்திரமும் சாதனமும் – 01 – வாங்குதல். (த.தொ.எண்.2225 02 277 AF 1918) | 22x5000 | 1,10,000 |
| "2225– ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 02 பழங்குடியினர் நலன் –277 கல்வி– பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத்திட்டம் – JU - பழங்குடியினர் மாணவர்களுக்காக அரசு மாணவர் இல்லங்களை ஏற்படுத்துதல் – 19 இயந்திரமும் சாதனமும் – 01 – வாங்குதல் (த.தொ.எண்.2225 02 277 JU 1919) | 12x5000 | 60,000 |
| "2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 02 – ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி – I திட்டத்தில் சேராதது – AA – பள்ளிகள் 19 – இயந்திரமும் சாதனமும், 01 வாங்குதல் (த.தொ.எண்.2225 02 277 AA 1918) | 230x5000 | 11,50,000 |
| "2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 02 – பழங்குடியினர் நலன் – 277 கல்வி– பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத்திட்டப்பணிகள் – II மாநிலத்திட்டம் JC – | 52x5000 | 2,60,000 |

| | | |
|---|---|---|
| மாணவர் இல்லம் இணைந்த பழங்குடியினர் பள்ளிகளை தொடங்குதலும் பராமரித்தலும் – 19 – இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல் (து.தொ.எண்.2225 02 277 JC 1915) | | |
| "2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 02 பழங்குடியினர் நலன் – 277 கல்வி– பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத்திட்டப்பணிகள் –II மாநிலத்திட்டம் JX – பழங்குடியினர் தங்கிப் பயிலும் அரசின் தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல் 19 இயந்திரமும் சாதனமும், 01 வாங்குதல் (து.தொ.எண்.2225 02 277 JX 1913) | 5x5000 | 25,000 |
| "2225– ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 02 பழங்குடியினர் நலன் –277 கல்வி– பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத்திட்டப்பணிகள் –II மாநிலத்திட்டம் JY – பழங்குடியின இன மாவணவர்கள் தங்கிப் பயிலும் நடுநிலை / உயர்நிலைப் பள்ளிகளை உயர்நிலை / மேல்நிலை பள்ளிகளாக நிலை உயர்த்துதல் 19 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல்(து.தொ.எண்.2225 02 277 JY1911) | 8x5000 | 40,000 |
| | மொத்தம் | 80,72,000/– |

6. இது ஒரு 'புதுதுணைப்பணி' குறித்த (New instrument of service) செலவினமாகும். உரிய காலத்தில் இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன் பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு பொது – I) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து செலவு செய்ய தேவையான தொகைக்கு செயற்குறிப்பினை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு–செலவு பொது – I) துறைக்கு விண்ணப்பிக்கும்படி ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் 2012–2013 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைக்கான உரிய விளக்கக் குறிப்பினை (வரவு–செலவு பொது - I) துறைக்கு அனுப்பி வைக்கும்படி ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை ஆணையர் ஆதிதிராவிடர் நலம் அவர்கள் பெற்று பத்தி 4–ல் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் நடைமுறையில் உள்ள விதிமுறைகளைப் பின்பற்றி மின்னணு எடை இயந்திரங்களை வாங்கி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் மூலமாக அவற்றை பகிர்ந்தளிக்க அதிகாரம் அளிக்கப்படுகிறது.

8. மேலே பத்தி 3–ல் குறிப்பிடப்பட்டுள்ள 1616 மின்னணு எடை இயந்திரங்கள் வாங்கி வழங்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா.கு.எண். 279/ DS (VS)/2012 நிதி (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்)துறை நாள். 26.10.2012 கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1423 (ஆயிரத்து நானூற்று இருபத்து மூன்று) ல் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தங்க கலியபெருமாள்.
அரசு செயலாளர் (பொறுப்பு)

பெறுநர்:
ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5,
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலர்கள்
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–5.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35/6.
கணக்காய்வுத் தலைவர் (CAB), சென்னை–9.

நகல்:–
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
அமைச்சர்(நிதி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
அமைச்சர் (ஆதிதிராவிடர்(ம)பழங்குடியினர் நலன்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (ஆதி(ம)பந) துறை , சென்னை–9.
நிதி (ச.ந./வ.செ.பொI/வ.செ.பொ.II)துறை, சென்னை–9.
திட்டம் மற்றும் வளர்ச்சி, சிறப்பு முயற்சிகள் துணை, சென்னை–9.
அரசு செயலரின் தனிச்செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு.1, ஆதிந2, ஆதிந3, ஆதிந7, ஆதிந8, ப.மே1, ப.மே2, க.மா.பா)துறை, சென்னை–9
இருப்புகோப்பு/உபரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சா. விஜயலக்ஷ்மன்
பிரிவு அலுவலர் 18/1/2013